[1994 மே 2

முடியவில்லை என்றும் செப்பனிடவேண்டுமென்றும் கோப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அது செப்பனிடப்பட்ட உடனேயே உறுப்பினர் கூறியதைப்போல அந்தப் பேருந்துகளை இயக்குவதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாட்டினால் சோழன் போக்குவரத்துக் கழகத்தினால் நிறுத்தப்பட்ட பஸ்கள் அனைத்தும் மறுபடியும் விடப்பட்டுள்ளதா? இல்லையென்றால் உடனடியாக விடப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாடு இருந்ததன் காரணமாக சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 3 வழித்தடங்களைத் தவிர அனைத்து வழித்தடங்களிலும் நாங்கள் பேருந்துகளை இயக்கி இருக்கிறோம். இந்த மூன்று வழித்தடங்களிலும் பாலங்களும் சாலைகளும் சரியான நிலையில் இல்லாததாலும் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினாலும் அங்கே இயக்கமுடியவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மண்ணுக்கு வருகை தந்தபோது அங்கே இருந்த பழைய பேருந்துகளை உடனடியாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஒரே நாளில் 90 பேருந்துகளை நாங்கள் வாங்கினோம். புதிதாக 100 பேருந்துகள் வாங்கி, பழைய பேருந்துகளை மாற்றுவதற்காக ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

464—

பேருந்துகள் அதிக அளவு புகை வெளியிடுவதைத் தடுத்தல்.

** 21634—திரு. ஜெ. பாலகங்காதரன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மே 2]

(அ) தமிழகத்தில் அரசு இயக்கும் பேருந்துகள் அதிக அளவு புகை வெளியிடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்துப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அதிக அளவு புகை வெளி வருவதை தடுக்க முறையான பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு, அதிக புகை வெளிவருவது தவிர்க்கப்பட்டு வருகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தானைத்தலைவி, தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இன்றையதினம் பேருந்துகளிலிருந்து அதிக அளவில் புகை வருவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் சென்னை, மதுரை, போன்ற நகரங்களில் நாங்கள் எல்லாம் ஆட்டோக்களிலும் அல்லது வாடகை கார்களிலும் செல்லும்போது, ஆக்சிலேட்டரை மிதித்தவுடன் அந்தக் கார் நிரம்பி விடுகின்ற அளவுக்கு புகை வெளிவருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் சென்னை போன்ற பெரு நகரங்களில் 11 மணி அளவில் செல்லும்போது-மவுண்ட் ரோட்டிலே செல்லும்போது குறிப்பாக புகை அதிக அளவில் இருக்கிறது. அதன் காரணமாக கண்கள் எல்லாம் எரிகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் கட்டுப்பாடு வைத்து இவ்வளவு புகைதான் ஒவ்வொரு பேருந்துகளிலிருந்தும் வரவேண்டுமென்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் புகை அதிக அளவில் வருவதைத் தவிர்க்க பராமரிப்பு செய்து வருகின்றோம். இன்ஜின், பம்ப், நாசல் போன்றவை உடனுக்குடன் மாற்றப்படுகின்றன. மாதம் ஒரு முறை, வாரம் ஒரு முறை, நாள்தோறும் என்று செய்து கொண்டிருக்கிறோம். புகைகள் தவிர்க்கப்படுகின்றன. வேறு வாகனங்களில் வருகின்ற புகைகளைத் தடுப்பதற்காக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாக நாங்கள் தற்போது பரிசீலனை செய்திருக்கிறோம். அதேபோல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி வந்தபிறகு 59 லட்ச ரூபாயை அந்த வட்டாரப் போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் புகை அதிகமாக

வருவதைப் பரிசீலிப்பதற்காக இந்த ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கான ஒரு நிதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் தொகையையும் வைத்துக் கொண்டு நாங்கள் எதிர்காலத்திலே புகையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறோம்.

முற்பகல் 10-20

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல இன்றையதினம் தனியார் வைத்திருக்கும் மணல் லாரிகள் போன்ற லாரிகளும், ஒரு குறிப்பிட்ட அரசின் பழைய பேருந்துகளும் ஏற்படுத்துகின்ற புகைக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், ஆயிலே மாற்றுவதில்லை. எஞ்சினுடைய ஆயிலை மாற்றாமல் மிகவும் நாறக்கூடிய ஒரு நிலை இருந்து வருகிறது. அந்த சூழ்நிலைமையை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்காகத் தான் வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலமாக 6 மாதத்திற்கு ஒரு முறை எப்.சி. செய்கின்றபோது, அந்த புகைகளைத் தடுப்பதற்கு நாங்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்திய துணைக் கண்டத்திலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே 59 லட்சம் ரூபாய் செலவில் புகையினை தடுக்கின்ற அந்த பல்வேறு கருவிகளை வாங்குவதற்கு எல்லா வட்டார போக்குவரத்துக் கழகத்திற்கும் அனுமதியைத் தந்திருக்கிறார்கள். அந்தப் பணியைச் மேற்கொண்டிருக்கிறோம். ஆக அந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது இது போன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையிலே சில பேருந்துகளில் தான் புகை அதிகமாக இருக்கிறது. ஆக புகை அதிகம் வருவதற்குக் காரணம் டீசலிலே, பெட்ரோலிலே மண்ணெண்ணை கலந்துவிடுவதால் தான் வருகிறது என்று நினைக்கிறேன். ஆக அரசே ஒரு பெட்ரோல் வங்கியோ

1994 மே 2]

அல்லது டீசல் வங்கியோ வைத்துக் கொண்டால் இதைத் தவிர்க்கலாம் என்று நினைக்கிறேன். இதை அரசு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியன் ஆயில் .கம்பெனியில் இருந்துதான் நாங்கள் அந்த டீசலைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம், அதுவும் ஒரு அரசு துறை தான். ஆகவே தான் அந்த மாதிரி அரசிடத்திலே எல்லாம் எங்களிடம் தனிப்பட்ட முறையிலே தமிழகத்திலே நாம் வைத்துக் கொண்டிருக்க முடியாது. பங்க் இடம் அங்கே வைத்துக்கொண்டிருக் கிறோம். அவர்களே பங்க் அங்கே வைக்கிறார்கள். அவர்களே டேங்கர் வேனிலே கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அதிலே நம்முடைய போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலே டீசலிலே கெரோசின் கலக்கின்ற வாய்ப்பே இருக்காது. நாங்கள் வாரத்திற்கு ஒருமுறை அதை பரிசோதித்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், எழுந்திருந்து எப்படிக் கேட்கலாம்? உட்கார்ந்துகொண்டு கேட்கும்போதுதான் கைதூக்கவேண்டும். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பஸ்களில் அதிக அளவில் புகை விடுவதைத் தடுப்பதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் பஸ்களுடைய இன்ஜினை பரிசோதித்து எப்.சி. முடிந்து வண்டி ரோடிலே ஓடிவருகிறபோது அந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சர்டிபிகேட் வாங்கி, அவர்கள் அந்த பஸ்ஸில் டெல்லி, பாம்பே நகரங்களில் ஒட்டி இருப்பதைப் போல ஒட்டி, அந்த புகைகள் வெளியிடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற பேருந்துகளிலே அந்த நிலை இல்லை. அதை நாங்களே தடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த புகைகள் அதிகமாக வரக்கூடாது என்பதற்காக, அப்படி ஏதாவது வண்டிகளிலே என்ஜினிலே கோளாறுகள் வருகிறபோது தவிர்த்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல டீசலிலே சிக்கனமாக இருக்கின்ற காரணத்தினாலேயே முதல் விருதை தேசிய அளவிலே நாம் பெற்று இருக்கிறோம். ஆகவே டீசல் சிக்கனப்படுத்துகிறபோது, புகைகள் வரவில்லை என்று தான் பொருள். ஆகவே அத்தகைய நிலை நம்முடைய போக்குவரத்துக்கழகங்களிலே இல்லை.

[1994 மே 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை பஸ்களில் கீழே வருகிறது. அந்த சைலன்சரை மேலே திருப்பிவிட்டு, இந்த புகை பஸ்களின் மேலே போகும்படி அமைக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை கீழே தான் வரவேண்டும் என்பது தான் நோக்கம். மேலே வரவேண்டுமென்று விரும்புவது எப்படி? அவருடைய எண்ணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது சில உறுப்பினர்கள் தலைகீழேதான் சிந்தனைகளைக் கொண்டு செல்வார்கள். அதிலே திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் அவர்கள் முன்வரிசையிலே இருக்கிறவர். அடுத்த உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், திரு.சுந்தரவேல் போன்ற உறுப்பினர்தான் அவர்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஞ்ஞான வளர்ச்சிக் காலத்திலே புகை வண்டிகள் கூட புகையே இல்லாத மின்சார வண்டிகளாக மாற்றப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலை இப்போது பேருந்துகளிலே தான் இருக்கிறது. அதே போல மண்பாடி லாரி என்று எங்கள் பகுதியிலே சொல்வார்கள். மணலையும் மண்ணையும் ஓட்டிச் செல்கின்ற லாரிகள், இதுபோன்ற வாகனங்கள் இன்று புகையைத் தள்ளிக்கொண்டு இருக்கின்றன. இவைகள் புகைவண்டிகள் போல் தமிழகத்திலே பல இடங்களிலே வலம் வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே 59 லட்சம் ரூபாயிலே நாங்கள் ஆர்.டீ.ஓ. ஆபிசிலே செக் செய்வதற்காக ஒரு முறை வைத்திருக்கிறோம் என்கிறார்கள். எப்.சி. செய்வது என்பது ஒரு கடமைக்காக செய்யப்படுவதாக இருக்கின்ற காரணத்தினாலே இப்போது அதை நீங்கள் ஆர்.டீ.ஓ.ஆபிசிலே அதை கொடுப்பதை விட, நீங்களே அதைப் பரிசோதிக்கக்கூடிய ஒரு நிலையை, சட்ட மன்ற உறுப்பினர்களை ஒரு குழுவாக அமைத்து, அந்தமாதிரி எப்.சி. கொடுக்கிற நாளிலே புகையே வராத அளவுக்கு, கண்காணிக்க வேண்டும். நீங்கள் ஆர்.டி.ஓ. ஆபிசை நம்புவதை விட, வேறு ஒரு துறை, ஒரு குழுவை ஏற்படுத்தி, நீங்கள் எல்லா வண்டிகளையும், புகை வரக்கூடிய வண்டிகளைச் சோதிக்க வேண்டும். ரீபோர் பண்ணுவதில்லை. நிறைய வண்டிகளை ரீ-போர் பண்ணாத காரணத்தினாலே தான் இது ஏற்படுகிறது. ஆயிலை சேன்ஜ் பண்ணாததாலேகூட புகை வருகிறது என்று அதிகமாகச் சொல்லமுடியாது.

1994 மே 2]

ரீ-போர் பண்ணவேண்டிய நேரத்தில் இவர்கள் ரீ-போர் பண்ணாமல் ஓட்டிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் அதிகமான புகையை வண்டிகள் தள்ளிக்கொண்டிருக்கின்றன. அதற்காக ரீ-போர் செய்து எவ்வளவு ஆண்டுகள் ஆயிற்று என்று சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து ஒரு குழுவை வைத்து அதிலே புகையைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே அந்தக் குறைபாடு இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய மனதிலே குறைபாடு இருக்கிறதே தவிர அங்கு இருக்கிற போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற அந்தப் பேருந்துகளினுடைய என்ஜினிலே குறைபாடு இல்லை. அதைத்தான் நான் பேசுகிறபோது குறிப்பிட்டுக் காட்டினேன். நான் குறிப்பிடுகிறபோது, இதுபோன்ற குறைபாடுகள் போக்குவரத்துக் கழகத்திலே தவிர்க்கப்படுகிறது என்று சொன்னேன். நாள்தோறும் அதைப் பரிசோதிக்கிறோம். மாதந்தோறும் பரிசோதித்துக் கொண்டிருக்கிறோம். 6 மாத காலத்திற்கு ஒரு முறை பரிசோதித்துக் கொண்டிருக்கிறோம். வட்டாரப் போக்குவரத்துக் கழகத்தில் அந்தப் புகைத் தடுப்பு கருவியை வைக்கிறபோது மாசுக் கட்டுப்பாட்டிலே இருந்து ஒருவர் இருப்பார். அதைப் பரிசோதிப்பதற்காக, அவர் டெக்கனிக்கலிட்டி தெரிந்தவர், சட்டமன்ற உறுப்பினரை வைத்துக் கொண்டால் என்ன தெரியும்? நான் கேட்கிறேன், புகை வருகிறதா வரவில்லையா என்று உங்களால் எப்படிப் பரிசீலிக்க முடியும்? என்ன காரணம் என்று உங்களால் சொல்ல முடியும்? ஆகவேதான், அதற்காக ஒரு குழுவை உருவாக்கி, பொறியியல் வல்லுநர்களை வைத்துக்கொண்டு, அதைத் தடுப்பதற்காக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலே ஒன்றை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த உறாஃப் பாடி லாரிகள், மணல் லாரிகள் இருக்கிறதே, அதிலே புகை வருகிறது. அதைத் தடுப்பதற்காககூட மத்திய அரசிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பழைய லாரிகளை நாம் ஓட்டக்கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்திலே, அதை கன்டம் செய்துவிட வேண்டும் மேலை நாடுகளைப் போல என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு அந்தச் சட்டத்தை நம்மால் அமல்படுத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னையைச் சுற்றியிருக்கிற இந்த அரை பாடி லாரிகளைத் தடை செய்தால்கூட நன்றாக இருக்கும்.

வினா எண் 465, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 466, திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

466—

நரிமணம் மின்நிலையத்தில் மின்சாரம் தயாரிக்கும் இரு பிரிவுகளை மீண்டும் இயக்குதல்

** 14705—திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் நரிமணம் மின்நிலையத்தில் மின்சாரம் தயாரிக்கும் இரண்டு பிரிவுகளும் செயல்படாமல் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த மின் திட்டம் எப்பொழுது முதல் மீண்டும் இயங்கத் துவங்கும்?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் 5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு எரிவாயு சுழலி மின்னாக்கிகள் நிறுவப்பட்டன. ஆனால், மின்னாக்கிகளிலிருந்த குறைபாட்டினால் இரண்டு மின்னாக்கிகளும் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் செயல்படாமல் போயின. அவைகளை நிறுவிய ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனம் தங்கள் சொந்தச் செலவிலேயே பழுதுபார்த்து முதல் மின்னாக்கியை 13.8.92 முதலும், இரண்டாவது மின்னாக்கியை 7.9.92 முதலும் இயக்கி வைத்தது. இந்த மின்னாக்கிகளைப் பழுதுபார்ப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலவு ஏதும் செய்யவில்லை.

(ஆ) இந்த இரண்டு எரிவாயு சுழலி மின்னாக்கிகளும் இப்போது தொடர்ச்சியாகச் செயல்பட்டு வருகின்றன.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் என்னுடைய தொகுதியான நன்னிலத்தில் நரிமணத்தில் கிடைக்கக்கூடிய அந்த இயற்கை எரிவாயுவைக் கொண்டு 5 மெகாவாட்